டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 11.04.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 244 - Madurai | Online Edition

# வணிக ரீதியான எல்பிஜி ஒதுக்கீடு உடனடியாக 70 சதவீதம் அதிகரிக்கப்படுகிறது

## இந்திய எண்ணெய் கழகத் தலைவர் தகவல்



சென்னை, ஏப்.10

தமிழ்நாட்டில் வணிக ரீதியான சமையல் எரிவாயு ஒதுக்கீட்டை மூல நிலையிலிருந்து 70 சதவீதம் அதிகரிக்கப்பட்டு உள்ளதாகவும், இது உடனடி யாக அமலுக்கு வரும் என்றும் இந்திய எண்ணெய் கழகத்தின் (ஐஓசிஎல்) தலைவர் ஏ எஸ் சஹானி நேற்று (10.04.26) அறிவித்துள்ளார்.

மாநிலத்தின் எரிபொருள் நிலைமை குறித்து விரிவாக ஆய்வு செய்த பின், சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய பேசிய அவர், சுத்திகரிப்பு திறன்கள் ஏறத்தாழ முழு அளவில் இருப் பதால் பெட்ரோல், டீசல், விமானத்திற்கான எரிபொருள் உட்பட திரவ எரிபொருள் விநியோகத்தில் சிக்கல் இல்லை என்று பொது மக்களுக்கு உறுதியளித்தார்.

நாள்தோறும் சுமார் 5 லட்சம் சிலிண்டர்கள் என்ற மாநிலத்தின் சமையல் எரிவாயு தேவையை 100 சதவீதம் பூர்த்தி செய்யும் நிலையில் எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் உள்ளன என்றும், வீட்டு உபயோக சமையல் எரிவாயுக்கு அதிகபட்ச முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித் தார். சில பகுதிகளில் 6 முதல் 8 நாட்கள் வரை காத்திருப்பு காலம் இருப்பதை குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் கூறினார்.

மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற அத்தியாவசிய பகுதிகளுக்கு எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் 100 சதவீத தேவைப் பூர்த்தி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

சென்னை புறநகர் பகுதிகளில் 20 நாட்கள் வரை காலதாமதம் ஆவதாக செய்தியாளர்கள் தெரிவித்த போது, விரிவானப் பகுப்பாய்வு நடத்தப்பட்டுள்ளதாகவும் நாளை மாலைக்குள் இத்தகைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று சஹானி தெரிவித்தார்.

பதுக்கல் மற்றும் முறைகேடுகளை தடுக்க மாநில அரசு 10,000-க்கும் அதிகமான திடீர் ஆய்வு களை மேற்கொண்டதாகவும் எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் முன்கூட்டியே அறிவிக்காமல் 1,500-க்கும் அதிகமான திடீர் சோதனைகளை தமிழ்நாடு முழுவதும் மேற்கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மக்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய போதிய கச்சா எண்ணெய் இருப்பில் உள்ளதால் எரிபொருட்கள் வாங்குவது தொடர்பாக மக்கள் பீதியடைய வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கையிருப்பு, விநியோகம், அணுகல் ஆகியவற்றில் அரசின் கவனத்தை வலியுறுத்திய சஹானி, குழாய் மூலம் இயற்கை எரிவாயு என்பதற்கு மாற வேண்டும் என வாடிக்கையாளர்களை அவர் கேட்டுக்கொண்டார். பாரம்பரியமான சமையல் எரிவாயு சிலிண்டர் என்பதோடு ஒப்பிடுகையில், குழாய் மூலம் எரிவாயு இணைப்புக்கு மாறுவதால் தூய்மையான, மலிவான, அதிகமான எரிபொருள் அனைவருக்கும் கிடைக்கும் என்று அவர் கூறினார்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஏப்.10

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, ஒடிசாவின் உட்பகுதிகள் முதல் மன்னார் வளைகுடா வரை தெற்கு சத்தீஸ்கர், தெலங்கானா, ராயலசீமா, உள் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. வடக்கு தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று (11.4.26) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். நாளை (12.4.26) தென் தமிழகம், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொறுத்தமட்டில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

நேற்றைய தொடர்ச்சி...

**சுருக்க ஒப்பீட்டு அட்டவணை**

கீழே உள்ள அட்டவணை அனைத்து 8 உணவு வகை களையும் ஒரே பார்வையில் ஒப்பிட உதவுகிறது :

**உணவு வகை / நேரம் / முக்கிய பலன் / வெப்பநிலை / சீசன்**

அவல் தயிர் சாதம்/5-7 நிமிடம்/குடல் ஆரோக்கியம்/குளிர்/சர்வ காலம்

அவல் பச்சடி/ 5–8 நிமிடம்/நோய் எதிர்ப்பு சக்தி/குளிர்/சாதாரண சர்வ காலம்

அவல் வாழைப்பழம்/1 நிமிடம்/குழந்தை ஆரோக்கியம்/சாதாரண சர்வ காலம்

தேங்காய்ப்பால் கஞ்சி/10 நிமிடம்/கர்ப்பிணி பலம்/இளஞ்சூடு/சர்வ காலம்

அவல் சாட் / 20 நிமிடம் / பசி கட்டுப்பாடு / சாதாரண / சர்வ காலம்

அவல் லாட்டு / 15 நிமிடம் / திருவிழா உணவு / சாதாரண / சர்வ காலம்

அவல் மாங்காய் சாட் / 8 நிமிடம் / கோடை குளிர்ச்சி /குளிர் / கோடை

அவல் ட்ரெய்ல் மிக்ஸ்/10 நிமிடம்/பயண உணவு/சாதாரண/சர்வ காலம்

**யார் சாப்பிடலாம்? யார் கவனிக்கணும்?**

| யார்? | பரிந்துரை / கவனிக்க வேண்டியவை |
|---|---|
| கர்ப்பிணி பெண்கள் | இரும்புச்சத்து, கால்சியம் நிறைந்த ஆவல் தேங்காய்ப்பால் கஞ்சி, லட்டு ஏற்றது |
| குழந்தைகள் (6+ மாதம்) | அவல் வாழைப்பழம் முதல் weaning food ; மென்மையான செரிமானம் |
| விளையாட்டு வீரர்கள் | சாட், ட்ரெய்ல் மிக்ஸ் – புரதம் + கார்போஹைட்ரேட் சேர்க்கை |

தலைக் கவசம் உயிர்க் கவசம்

முறையாக தலைக் கவசம் அணிவோம்

| | |
|---|---|
| மாணவர்கள் | விரைவான, ஆற்றல் தரும் சிற்றுண்டி – நேர சேமிப்பு |
| நீரிழிவு நோயாளிகள் | வெல்லம், பழம், தேன் அளவை கட்டுப்படுத்தவும் மருத்துவர் ஆலோசனை பெறவும் |

கொட்டை அலர்ஜி உள்ளவர்கள் : சாட், ட்ரெய்ல் மிக்ஸ் தவிர்க்கவும்

அல்சர் / வயிறு எரிச்சல் : மாங்காய், எலுமிச்சை சேர்ப்பவற்றை தவிர்க்கவும்

கிட்னி பிரச்னை : தயிர் அளவை மருத்துவர் வழிகாட்டுதலில் கட்டுப்படுத்தவும்

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**

# நாளை (12ஆம் தேதி) வரை 'வெப்ப அலை' எச்சரிக்கை!

சென்னை, ஏப்10

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் (IMD) தரவுகளின்படி, தமிழகத்தின் உட்புற மாவட்டங்களில் நிலவும் வறண்ட வானிலை காரணமாக, கோவையில் இந்த அதீத வெப்பம் வரும் ஏப்ரல் 12ஆம் தேதி வரை நீடிக்கக்கூடும். குறிப்பாக மதிய நேரங்களில் அனல் காற்று வீச வாய்ப்புள்ளதால், 'வெப்ப அலை' (Heatwave) எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பொது மக்கள் அவசியமின்றி மதியம் 12 மணி முதல் மாலை 4 மணி வரை நேரடி வெயிலில் செல்வதைத் தவிர்க்கவும். மேலும், தாகம் இல்லாவிட்டாலும் அடிக்கடி தண்ணீர் பருக வேண்டும். இளநீர், மோர் மற்றும் பழச்சாறு களை அதிகம் எடுத்துக்கொள்ளவும். கோடை வெயிலைச் சமாளிக்க இயற்கை பானங்களைத் தேர்வு செய்யுங்கள்.

உங்கள் செல்லப் பிராணிகளுக்கும் நிழலான இடத்தையும், குளிர்ந்த நீரையும் உறுதி செய்யுங்கள்.

# விநியோகச் சங்கிலியில் தடைகள் இருந்தபோதிலும், மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களின் விற்பனை விலைகளில் பெரிய அதிகரிப்பு எதுவும் இல்லை

## மத்திய அரசு தகவல்

புது தில்லி, ஏப்,10

மேற்கு ஆசிய சூழல் குறித்து, மத்திய அரசு நேற்று முன்தினம் புதுதில்லி தேசிய ஊடக மையத்தில் நடத்திய ஒரு விளக்கக் கூட்டத்தில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, துறை முகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள், வெளியுறவு மற்றும் தகவல் ஒலிபரப்பு அமைச்சகங்களின் அதிகாரிகள் பங்கேற்று, எரிபொருள் இருப்பு, கடல்சார் நடவடிக்கைகள், அப்பகுதியில் உள்ள இந்தியர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் மற்றும் முக்கியத் துறைகளில் நிலைத்தன்மையைப் பேணுவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த தகவல் களைப் பகிர்ந்துக் கொண்டனர். ரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மருந்துத் துறையும் சமீபத்திய தகவல்களைப் பகிர்ந்து கொண்டது.

**அவற்றின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு :**

மேற்கு ஆசிய நெருக்கடியின் காரணமாக, மருந்துப் பொருட் களுக்கான உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் இடை யூறுகள் ஏற்பட்டுள்ளது. இருந்தபோதிலும், நாட்டில் மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களின் விற்பனை விலைகளில் பெரிய அளவில் அதிகரிப்பு ஏற்படவில்லை.



மருந்துத் தொழிலுக்கு ஆதரவளிக்கவும், அத்தியாவசிய மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்யவும், வருவாய்த்துறை 40 பெட்ரோலிய வேதிப் பொருட்களுக்கான சுங்க வரியை பூஜ்ஜியமாகக் குறைத்து உள்ளது. மருந்து உற்பத்திக்குத் தேவையான அத்தியாவசிய உள்ளீடுகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, மருந்துப் பொருட்கள் துறை, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் மற்றும் ரசாயனங்கள் மற்றும் பெட்ரோலிய ரசாயனங்கள் துறை ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.



சமையல் எரிவாயுவைப் பொறுத்தவரை, 08.04.2026 அன்று, 51.5 லட்சத்திற்கும் அதிகமான வீட்டு உபயோக எல்பிஜி சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

மார்ச் 23, 2026 முதல், சுமார் 10 லட்சம் 5-கிலோ தடையில்லா வர்த்தக எல்பிஜி (எஃப்டிஎல்) சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

பிப்ரவரி மாதத்தில் அன்றாட சராசரி 77,000 ஆக இருந்த நிலையில், 08.04.2026 அன்று நாடு முழுவதும் 1.06 லட்சத்திற்கும் அதிகமான 5 கிலோ எஃப்டிஎல் சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டன. மார்ச் 14, 2026 முதல் சுமார் 99,796 மெட்ரிக் டன் வர்த்தக எல்பிஜி (52. லட்சத்திற்கும் அதிகமான 19-கிலோ சிலிண்டர்களுக்குச் சமம்) சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டன. நேற்று, 6711 மெட்ரிக் டன் வர்த்தக எல்பிஜி (3.5 லட்சத்திற்கும் அதிகமான 19-கிலோ சிலிண்டர்களுக்குச் சமம்) சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களும் போதுமான கச்சா எண்ணெய் இருப்புடன் உயர் திறனில் இயங்கி வருகின்றன, அதே நேரத்தில் போதுமான பெட்ரோல் மற்றும் டீசல் இருப்பும் பராமரிக்கப்பட்டு வருகிறது. உள்நாட்டு நுகர்வை ஆதரிப்பதற்காக, சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து உள்நாட்டு எல்பிஜி உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

2026 ஏப்ரல் 5 அன்று ஹார்முஸ் நீரிணையைக் கடந்த இந்தியக் கொடி தாங்கிய 'கிரீன் ஆசா' என்ற எல்பிஜி கப்பல், நேற்று காலை ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையத்தைப் பாதுகாப்பாக வந்தடைந்தது. இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்



# தென்னந்தோப்புகளில் மண்ணில் ஈரத்தன்மை சேமிக்கும் முறைகள்

சேலம், ஏப்.10

தென்னந்தோப்புகளில் மண்ணில் ஈரத்தன்மை சேமிக்கும் முறைகள் குறித்து அயோத்தியாப்பட்டணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.சண்முகபிரியா தெரிவித்து உள்ளதாவது :

● தென்னை சாகுபடி செய்யும் பகுதிகளில் தென்னை நார்க்கழிவு பெருமளவில் கிடைக்கின்றது. தென்னை நார்க் கழிவை 10 முதல் 15 செ.மீ உயரம் வரை வட்டப்பாத்திகளில் பரப்ப வேண்டும். இம்முறை மூலம் நீர்ப்பாசனம் செய்வதால் மண்ணின் மேல் பரப்பில் நீர் ஆவியாதல் குறைந்து மண்ணின் ஈரத்தன்மை காக்கப்படுகின்றது.

● தென்னை மரங்களைச் சுற்றி 6 அடி சுற்றளவில் வட்டப்பாத்திகளில் ஒவ்வொரு மரத்திற்கும் 12 முதல் 15 வரை தென்னை ஓலைகளை பரப்புவதால் மண்ணின் மேற்பகுதியில் நீர் ஆவியாதல் குறைகின்றது. இம்முறைகள் மூலம் நீர்ப்பாசன இடைவெளி வழக்கத்தை விட 3 முதல் 5 நாட்கள் வரை அதிகமாகின்றது.

● மரத்தைச் சுற்றியுள்ள வட்டப்பாத்திகளில் தேங்காய் உரிமட்டைகளின் நார்ப்பகுதி கீழ்நோக்கி இருக்குமாறு பரப்பி நீர்ப்பாசனம் செய்யலாம். இம்முறை மூலமும் மண்ணின் மேல் பரப்பிலிருந்து நீர் ஆவியாதல் குறைகின்றது.

● தேங்காய் மட்டையை இரண்டு வரிசையாக தென்னை மரத்தை சுற்றி அடிப்பாகத்தில், அதாவது மரத்தின் சுற்றளவில் 2 மீட்டர் வட்டத்தில் இடலாம். முதல் வரிசையை மட்டையின் வளவளப்பான மேல் பாகம் மண்ணில்படுமாறு வைக்க வேண்டும்.

● இரண்டாவது வரிசையை மட்டையின் மேல்பாகம் வானத்தை நோக்கி இருக்குமாறு வைக்க வேண்டும். தென்னை உரி மட்டை அதனுடைய எடையை காட்டிலும் 5 – 6 மடங்கு வரை நீரை சேமித்து வைக்கும் பண்புடையது என்பதால் மண்ணில் உள்ள நீரை வீணாகாமல் தடுத்து கிடைக்கும் மழை நீரையும் சேமித்து, தென்னை மரங்களுக்கு பயன்படுத்த உதவும்.

● தென்னை மரங்களுக்கு இடையில் (மழைக்கு முன்) 4 அடி அகலம், 2 அடி ஆழம், 12-15 அடி நீளத்தில் குழிகள் எடுத்து அதில் தென்னை மட்டையை பரப்பி வைத்தால், வறட்சி காலங்களில் மரங்களுக்கு இரண்டு மாதங்கள் வரை வரட்சியை தாங்கும் வல்லமை உடையது.

● தென்னந்தோப்பில் நார் கழிவு, உரிமட்டைகள் மற்றும் முதிர்ந்த விழுந்த ஓலைகளைக் கொண்டு நிலப்போர்வை (Mulching) செய்தல் நீரை சேமிக்க முடியும்.

● பசுந்தாள் உரம் மற்றும் மக்கிய எருவிடுவதால் மண்ணில் தண்ணீரைத் தேக்கி வைக்கும் திறன் அதிரிக்கின்றது.

● வருடத்திற்கு இரு முறை ஊடு உழவு செய்ய வேண்டும். முதல் உழவு மழைக்காலம் துவங்கிய உடனேயும், அடுத்த உழவு மழைக்காலம் முடியும் தருவாயிலும் செய்ய வேண்டும். முதல் உழவு மழை நீர் வடிந்து போகாமல் (runoff) தடுக்கவும், இரண்டாவது உழவு மண்ணில் இருக்கும் நீர் வேகமாக நீராவியாக மாறி வீணாகாமல் இருக்கவும் உதவும். அதிகமாக உழவு செய்வதை தவிர்க்க வேண்டும். உழும்போது மரங்களின் அடித்தண்டு சேதமாகாமல் பார்த்துக்கொண்டால் காண்டாமிருக வண்டு மற்றும் சிவப்புகூன் வண்டு தாக்கத்தையும் குறைக் கலாம் என அயோத்தியாப்பட்டணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.சண்முகபிரியா தெரிவித்துள்ளார்.

# அணைகள் நீர்மட்டம் சரிவு



தேனி, ஏப்.10

தேனி, மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் உள்ளிட்ட 5 மாவட்டங்களின் விவசாயம் மற்றும் குடிநீர் ஆதாரமாக பெரியாறு அணை உள்ளது. நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால், நீர்வரத்து தொடர்ந்து சரிந்து வந்த நிலையில், நேற்று முன்தின நிலவரப்படி பெரியாறு அணைக்கு நீர்வரத்து இல்லை. அணையின் நீர்மட்டம் 111.05 அடியாக உள்ளது. நீர் இருப்பு 1,078 மி.க. அடியாக உள்ளது.

தேனி மாவட்டத்தில் பரவலாக மழை இல்லாததால் வைகை அணைக்கு நீர்வரத்து 159 கனஅடியாக குறைந்த நிலையில், மொத்தம் 71 அடி உயரம் கொண்ட அணையில், நீர்மட்டம் 35.43 அடியாக சரிந்துள்ளது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மருத்துவ குணம் கொண்ட 'குங்குமப் பூ' சாகுபடி - ஒரு பார்வை



குங்குமப் பூவின் தாயகம் கிழக்கு ஐரோப்பியா மற்றும் கிரேக்க நாடென்று சொல்ல படுகிறது. இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் குங்கமம் பூ பயிரிடப் படுகிறது. இதனுடைய அறிவியல் பெயர் (CROCUS SATIVUS) ஆங்கிலத்தில் (SAF-FRON).

**குங்குமப் பூவின் வகைகள் என்ன?**

குங்குமப் பூவில் இரு வகை உள்ளன.

1) ஈரான் குங்குமப்பூ

2) ஸ்பெயின் குங்குமப்பூ

உலகிலேயே அதிகமாக பயிரிடப்படும் பகுதியாக ஸ்பெயினிலுள்ள லா-மாச்சா (LA- MACHA) என்ற பிராந்தியத்தில் மட்டுமே 80%-90% குங்குமப் பூ உற்பத்தி செய்யப்படுவதாக தரவுகள் உள்ளன. அதுபோல நம்முடைய நாட்டில் ஜம்மு காஷ்மீர் பகுதியில் உள்ள பாம்போர் மற்றும் கிஸ்ட்லார் ஆகிய பகுதிகளில் பயிரிடப்பட்டு உற்பத்தியாகின்றன.

**மண் மற்றும் காலநிலை?**

நல்ல வடிகால் வசதியுள்ள மணற்பாங்கான அனைத்து மண்ணிலும் பயிரிட ஏற்றதாகும். குங்குமப் பூ பூக்கும் காலத்தில் 15-20 டிகிரி செல்சியஸ் பகல் நேர வெப்பமும் இரவு நேரத்தில் 6 டிகிரி முதல் 8 டிகிரி தேவைப்படுகின்றன.

1000 மி.மீ மழை முதல் 1500 மி.மீ வரை மழை அளவு தேவைப்படுகின்றன. அதாவது குறைந்த வெப்ப நிலை மற்றும்

அதிகக் காற்றின் ஈரப்பதம் பூக்கள் உருவாக்கத்தை கணிசமாக பாதிக்கும். பூப்பதற்கு சற்று முன்னர் வரும் மழை பொழிவு குங்குமப் பூவின் விளைச்சலை ஊக்குவிக்கும்.

**விதை அளவு**

குங்குமப் பூ குமிழ் போன்ற கிழங்குகளை கொண்டு பயிரிடலாம். ஒரு எக்கருக்கு 2,00,000 (இரண்டு லட்சம்) கிழங்குகள் தேவைப்படுகின்றன. இக்கிழங்குகளின் விட்டம் 2 லிருந்து 5 செ.மீ க்கு அதிகமாகவும் 4.5 செ.மீ விட்டத்துடன் இருக்க வேண்டும். விதை நேர்த்தியாக நடவுக்கு முன் கிழங்குகளை காப்பர் ஆக்ஸி குளோரைடுயில் (BLUE COPPER) என்ற பூஞ்சான கொல்லியில் முக்கி எடுத்த பின் நடவு செய்ய வேண்டும். ஒவ்வொரு கிழங்கும் 2 முதல் 6 வரை சிறிய பக்க கிழங்குகளை உருவாக்கும்.

**நடவு பருவம்?**

பொதுவாக மழைக் காலங்களில் (ஜூலை – அக்டோபர் வரை நடவு செய்யலாம். குங்குமப் பூ பூத்தவுடன் சிவப்பு நிறத்தில் உள்ள சூலக மூடியை (STIGMAS) கவனமாக பறித்து நிழலில் உலர்த்தி பயன்படுத்தலாம். 2 லட்சம் மலர்களிலிருந்து 1 கிலோ குங்குமப் பூ மட்டுமே தயாரிக்க முடியும்.

கர்ப்பிணிகள் நம்முடைய ஊரில் பாலில் கலந்து குங்குமப் பூவை சாப்பிடுவார்கள். அவ்வாறு செய்தால் பிறக்கப் போகும் குழந்தை சிவப்பு நிறமாக பிறக்கும் என்பது ஒரு கட்டு கதையாகும்.

**குங்குமப் பூவில் ஒரிஜினல் மற்றும் போலிகள் உள்ளன. இவற்றை எப்படி கண்டுபிடிப்பது?**

சுடு தண்ணீரில் குங்குமப் பூவை போட்டால் அவை தங்க நிறமாக மாறும். அதுமட்டுமல்ல நல்ல வாசனையும் வரும். தரமற்ற போலி பூவாக இருந்தால் சுடு தண்ணீரில் போட்டவுடன் சிவப்பு நிறமாக மாறிவிடும்.

**பயன்கள்**

1. இனிப்பு பொருட்களில் மணமூட்டவும், நிறமூட்டவும் குங்குமப் பூ பயன்படுத்தப்படுகின்றன.

2. ஆயுர் வேதம் மற்றும் யுனானி மருத்துவ முறைகளில் முக்கிய மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் உலகின் முன்னணி நாடாக இந்தியா ஆதிக்கம் செலுத்த முடியும் : ஐஐடி மெட்ராஸ் ஆய்வு முடிவுகள்

புது தில்லி, ஏப்.10

முனைப்பான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டால் மட்டுமே, 2040-ம் ஆண்டிற்குள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில், உலகின் முன்னணி நாடாக இந்தியா ஆதிக்கம் செலுத்த முடியும் என்று இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (ஐஐடி) மெட்ராஸ் மேற்கொண்ட ஆய்வில், தெரிய வந்துள்ளது.

2050-ம் ஆண்டிற்குள், உலகளவில், கார்பன் வெளியேற்றத்தில் நிகர-பூஜ்ஜிய இலக்கை அடைவதற்கு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை முன்னெடுத்துச் செல்ல முடியுமா என்பது குறித்த விரிவான ஆய்வு முடிவுகளை ஐஐடி மெட்ராஸ் வெளியிட்டுள்ளது.

28-வது ஐ நா பருவநிலை மாற்றம் குறித்த மாநாட்டின் இலக்குகளை எட்டுவதற்கு, உடனடியாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான முதலீடுகளை, இருமடங்காக அதிகரிக்க வேண்டும் என்றும், மின் விநியோகக் கட்டமைப்பு, எரிசக்தி சேமிப்பு மீதான செலவினங்களை, 73 சதவீதம் உயர்த்த வேண்டும் என்றும், ஆய்வு முடிவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

தற்போதைய வளர்ச்சி விகிதத்தின்படி, 2050-ம் ஆண்டு வரை, உலகளவிலான எரிசக்தி பயன்பாட்டில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி, புதைபடிவ எரிபொருட்களுக்கு இணையான இடத்தைப் பிடிக்க இயலாது என்ற முக்கியதத்துவம் வாய்ந்த யதார்த்த நிலையை இந்த ஆய்வின் முடிவுகள் உணர்த்துகின்றன.

முன்னெப்போதும் இல்லாத அளவிலான முதலீடுகள் தேவைப்படுவதுடன், மிகவும் முனைப்புடன், திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தினால் மட்டுமே, 2040-ம் ஆண்டிற்குள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில், இந்தியா ஆதிக்கம் செலுத்த முடியும்.

’டிரான்சாக்ஸன்ஸ் ஆஃப் தி இந்தியன் நேசனல் அகாடமி ஆஃப் இன்ஜினியரிங்’ (https://doi.org/10.1007/s41403-025-00556-0) என்ற இதழில், ஆய்வாளர்கள் தங்களது ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.

இந்தியா மற்றும் உலகளவிலான தொழில்நுட்ப சவால்களுக்குத் தொடர்புடைய பொறியியல், அறிவியல், நடைமுறை, கொள்கைகள் குறித்த ஆய்வுகள், விமர்சனங்கள், கருத்துகளை இந்த இதழ் மதிப்பாய்வு செய்கிறது.

ஐஐடி மெட்ராஸ் வேதியியல் பொறியியல் துறையைச் சேர்ந்த



பேராசிரியர் ஜித்தேந்திர எஸ்.சங்வாய், முனைவர் பட்ட ஆய்வாளர் ரஜத் தேஹூரி ஆகியோர் இந்த ஆய்வுக் கட்டுரையை இணைந்து எழுதியுள்ளனர்.

இந்த ஆராய்ச்சி குறித்து விளக்கிய ஐஐடி மெட்ராஸ் வேதியியல் பொறியியல் துறை பேராசிரியர் ஜித்தேந்திர எஸ்.சங்வாய், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கு மாறுவது என்பது சுற்றுச்சூழல் சார்ந்த கட்டாயம் மட்டுமின்றி, அது பொருளாதாரம் மற்றும் புவிசார் அரசியல் சார்ந்த ஒன்றாகும். அதற்கான தொழில்நுட்ப வழிமுறைகள் உள்ளன என்பதை எங்களது ஆய்வு முடிவுகள் எடுத்துக் காட்டுகிறது. ஆனால், உலக நாடுகள்

இதற்குத் தேவையான முதலீடுகளை விரைவாக மேற்கொள்ள வில்லை என்றும், இலக்குகளுக்கும், செயல்பாடுகளுக்கும் இடையே உள்ள இடைவெளி, அதிகமாக உள்ளது என்றும் அவர் கூறினார். தற்போது, நமக்கு நம்பிக்கை மட்டுமின்றி, விரை வான, ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் போதிய நிதி வசதியுடன் கூடிய செயல்பாடுகள் அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

இணை ஆசிரியரும், ஐஐடி மெட்ராஸ் வேதியியல் பொறியியல் துறை முனைவர் பட்ட ஆய்வாளருமான ரஜத் தேஹூரி கூறுகையில், ‘இந்த பகுப்பாய்வு, கடந்த பத்தாண்டுகளின் உண்மையான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான வளர்ச்சி சார்ந்த தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதன் கணிப்புகள் எச்சரிக்கையூட்டுவதாக உள்ளன.

முதலீடு, கொள்கை சீர்திருத்தம் மற்றும் மின்கட்டமைப்பு வசதிகளில் மிகப்பெரிய அளவிலான மாற்றங்களை மேற் கொள்ளாவிட்டால், அடுத்த பத்தாண்டுகளில், முக்கியத்துவம் வாய்ந்த பருவநிலை மாற்றத்தைக் குறைப்பதற்கான இலக்குகள் அனைத்தையும் தவறவிடும் சூழல் உள்ளது‘ என்று தெரிவித்தார்.



# பயிர்களுக்கு அதிகப்படியான உரங்களை பயன்படுத்தாமல் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் கடைபிடிக்க வேளாண் துறை அதிகாரிகள் அறிவுரை



அரியலூர், ஏப்.10

அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் எப்போதும் அனைத்து பயிர்களுக்கும் மண் ஆய்வு செய்து அதன் விவரப்படி எப்போதும் ஒருங்கிணைந்த உரம் மேலாண்மை கடைப்பிடிக்க வேண்டும். இதில் இயற்கை எரு, பசுந்தால் பயிர், உயிர் உரங்கள், நீலே பச்சை பாசி, நுண்ணூட்ட உரங்கள் மற்றும் அசோலா போன்றவற்றை பயன்படுத்தி, பயிருக்கு தேவைப்படும் குறைந்த அளவு யூரியாவை பயன்படுத்த வேண்டும் என வேளாண் துறை அதிகாரிகள் அறிவுறுத்தினார்கள்.

அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனியின் அறிவுரையின்படி உரம் விற்பனை நிலையத்தை வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், ஆய்வு செய்தார். ஆய்வின் போது விவசாயிகளுக்கு அதிகப்படியான உரங்களை விநியோகம் செய்யக்கூடாது, அவர்களுக்கு ஆலோசனை வழங்கி சமச்சீர் வகையில் ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தின் அடிப்படையில் உரங்களை விநியோகிக்க வேண்டும். அனைத்து வகையான உரங்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும். விவசாயிகளுக்கு உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும்.

எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், மொத்த விற்பனையாளர்களிடம் இருந்து சில்லறை உர விற்பனையாளர்கள் உரம் பெற்றவுடன் அதை உடனடியாக pos எந்திரத்தில் வரவு

வைத்து இருப்பு பதிவேட்டில் உடனடியாக பதிவு செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் ஒவ்வொரு முறையும் பயிர் சாகுபடி செய்யும் முன் மண் மாதிரி எடுத்து, மண் வளத்தின் அறிந்து அதன் அடிப்படையில், ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தின் படியில் அனைத்து வகையான உரங்களை சமச்சீர் வகையில் சரியான விதத்தில் பயன்படுத்தி பயனடைய வேண்டும். யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ், டி ஏ பி அல்லது ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். எக்காணத்தைக் கொண்டும் களைக் கொள்கையுடன் யூரியாவை சேர்த்து பயன்படுத்தக் கூடாது. அதிக பட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். நானோ யூரியா மற்றும் நானோ டி ஏ பி, நீல பச்சை பாசி மற்றும் அசோலாவை பயன்படுத்தவதால் மண் வளத்தை காத்து உரத்திற்கான அதிகப்படியான செலவை குறைக் கலாம் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக் கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும் அசோஸ் பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஸ் பாக்டீரியா, துத்தநாக பாக்டீரியா, பயன்படுத்துவதால் பயிருக்கு தேவையான சத்துக் களை கொடுப்பது மட்டுமல்லாமல், மண்ணில் நன்மை செய்யக் கூடிய நுண்ணுயிர்கள் அதிகமாக பெருகி, மண் வளத்தை அதிகப் படுத்துகிறது.

அனைத்து வகையான பயிர்களுக்கு ஏற்ற வகையில் கிடைக்கக்கூடிய நுண் சத்து உரங்களான நெல் நுண்ணூட்டச் சத்து, பருத்தி நுண்ணூட்ட சத்து, பயிர் வகைகளுக்கான நுண்ணூட்டச் சத்து, சிறு தானிய பயிர்களுக்கான நுண்ணூட்டச் சத்து, போன்ற நுண் ஊட்டச்சத்து உரங்கள் பயன்படுத்துவதால், பயிருக்கு தேவையான அனைத்து வகையான நுண்ணூட்ட சத்துகள் கிடைப்பதுடன் மகசூல் பல வகையில் அதிகப்படுத்துகிறது. மற்றும் பசுந்தால் பயிர்களை விளைவித்து மடக்கி உழவு செய்து, பயன்படுத்துவதால் பயிருக்கு தேவையான தழைச்சத்து மற்றும் பல சத்துக்கள் கிடைப்பதுடன், மண்ணின் வளத்தை காத்து, நன்மை செய்யப்படும் நுண்ணுயிர்களின் பெருக்கத்தினால், பல்வேறுபட்ட பயிர் வளர்ச்சி ஊக்கிகள் உருவாகி, பயிருக்கு பயிர் வளர்ச்சிக்கு பயன்படுத்துவது மட்டுமல்லாமல், உரம் பயன்பாட்டை குறைத்து சாகுபடி செலவை குறைத்து, வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மடிநோய் இன்றும் ஏன் இன்னும் சவாலாக உள்ளது?



மாடுகளை பால் உற்பத்திக்காக உபயோகப்படுத்திய காலம் தொடங்கியதில் இருந்து மடிநோய் பால் உற்பத்தி தொழிலின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் புதிய தொழில்நுட்பங்கள், புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள், புதிய படுக்கை பொருட்கள் மற்றும் மாற்று பால் கறக்கும் முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஆனாலும் மடிநோய் உலகளவில் மிகுந்த சுகாதார சவால்களிலும் பெரும் சவாலான ஒன்றாகவே உள்ளது. இது மாநாட்டு அரங்குகளிலும் விவாதிக்கப்படுகிறது, ஆராய்ச்சி கட்டுரைகளிலும் விவாதிக்கப்படுகிறது மற்றும் உலகம் முழுவதும் உள்ள பால் பண்ணைகளிலும் தொடர்ந்து பேச்சு முறையில் உள்ளது.

மரபுயியல், ஊட்டசத்து தொழில்நுட்பகள் மற்றும் மாடுகள் வசதி ஆகியவற்றில் மிகுதல் முன்னேற்றம் கண்ட இந்த துறையில், மடிநோய் தொடர்ந்து இருப்பது உண்மையில் என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது, என்ன மாற்றம் ஏற்படவில்லை என்பதை கேள்விகுறியாக்குகிறது.

உலகளாவிய பால் உற்பத்தி மேலும் நன்றாக மாறி வருகின்றது என்றால், பால் சுரப்பு உறுப்பின் மீது விதிக்கப்படும் தேவைகள் தொடர்ந்து அதிகரிக்கின்றன, இந்த துறை இப்போது ‘நோய்களின் எண்ணிக்கையை குறைப்பது‘ பற்றி மட்டும் பேசாமல், நுண்ணுயிரி எதிர்ப்பு மருந்துகளின் பொறுப்புணர்வு, நுகர்வோர் எதிர்பார்ப்புகள் மற்றும் தொடர்ந்து கடுமையாகும் நலபுரி தர நிர்ணங்கள் ஆகியவற்றில் பிரமப்புமிக்கும் வகையில் அவற்றை மேலாண்மை செய்வது குறித்து அதிகம் பேசும் முறை உள்ளது.

மடிநோய் பழமையானது என்றாலும், அதனை சுற்றி உள்ள உலகச்சூழல் தொடர்ந்து மாறி வருகிறது. இந்த மாற்றங்கள் தான் மடிநோய் மேலாண்மையை இன்னும் வலுப்படுத்த

எடுத்துரைக்கிறது. ஏன் மடிநோய் இன்றும் தொடர்ந்து உள்ளது? இன்று உள்ள பெருகிய அறிவியல் அறிவு அமைப்புகள் மிகுது உள்ள போதிலும், மடிநோய் சவாலாக உள்ளது. இதன் ஒரு பகுதி உயிரியல் காரணம் மாடுகள்.

அதிக தொழில்நுட்ப மாறுபாடுகளும், மாடுகள் அதன் சுற்றுப் புறத்தில் உள்ள தொழில்நுட்பங்களும் மிகுந்து பொருத்தமாக அமைக்கப்படவேண்டும். இல்லையென்றால் மாட்டிற்கும் பால் உற்பத்தி செய்யும் பால் மடிக்கும் பாதகம் ஏற்படும். அதன் அடிப்படையில், மடிநோய் ஒரு தனி நோய் அல்ல. ஆனால் பல இணைக்கும் காரணிகள் மூலம் அமையப்படும் ஒரு விளை வாக உள்ளது.

படுக்கை தூய்மை, மாடுகளின் நடைமுறை, பணியாளர்களின் திறன், சுற்றச்சூழல் காலநிலை, வசதியான அமைப்புகள் ஆகியவை மாடு பொருந்துதலை பொருத்து பாலின் தரம் மற்றும் இலக்குகள் ஆகியவை இமைகின்றன. இந்த உறுப்புகளில் எதற்கும் மாற்றம் ஏற்பட்டால் மற்றும் கவன முறைகளில் அவற்றுக்கு மிகுந்து மாற்றம் ஏற்படும் போது பால் சுரப்பி மடி விரைவில் அதன் விளைவினை காண்பிக்கும்.

மடிநோய் தொடர்ந்து உள்ளதற்கு பால் உற்பத்தி முறைகள் அதிகம் சிக்கலானதாக மாறிவருவது ஒரு காரணமாகும். பல பகுதியில் மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதனுடன் ஒரு நிலையான நடைமுறை தேவை அதிகரிக்கிறது. ஆனால் இந்த நிலையானது பணியாளர் குறைவான நிலையினால் மிகவும் பாதிக்கப்படுகிறது. குறைவான பணிய–ளர்களினால் அதிகம் மாடுகளை பால் கறக்க வேண்டும். அப்பழக்கும் அவர்களுக்கு அனுபவம் குறைவாக உள்ளதால் சிறிய தவறுகள் பாதிப்பை ஏற்படுத்தும். படுக்கை பரிமரிப்பு அல்லது பால்கறவை

நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்படும் போது, அதன் விளைவுகள் அதிகமாக வெளிப்படுகிறது. அதனுடன் பால் பண்ணைகளுக்கு வைக்கப்படும் எதிர்பார்ப்புகள் தொடர்ந்து அதிகரிக்கிறது.

அன்மையில் எதிர்ப்பு குறைப்பது உலகளாவிய முக்கிய தலைப்பாக உள்ளது. இது முக்கிய மாற்றங்களை ஏற்படுத் தினாலும் மடிநோய் மேலாண்மையை குறைவான சிகிச்சை வளங்களுடன் பொருளாதார பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

தொழில்நுட்பம் சிறப்பானது என்றாலும், ஒரு புதிய சவால்களை அறிமுகப்படுத்தி உள்ளது. தரவு அதிகரிப்பால் பல பண்ணைகளில் இப்போது நடைமுறை அனுபவர்களை அறிவுபடுத்தும் அனுபவம் அதிகமாக உள்ளது. ஆனால் இந்த தரவுகளை நேரத்திற்கு ஏற்ற நடவடிக்கையாக மாற்றும் திறமை இன்றும் ஒரு சிக்கலான பகுதியாக உள்ளது.

மடிநோய் பால் உற்பத்தி துறையின் நீண்ட காலம் உள்ள சவால்களிலும் ஒன்றாக தொடர்ந்து உள்ளது என்றால், இது தொழிலின் தவறு அல்ல, ஆனால் பால் உற்பத்தி சுற்றுப் புறத்தில் தொடர்ந்து மாறி வருகிறது. இக்காலநிலைகளில், அதிகம் பால் உற்பத்தி செய்ய உள்ள அமைப்புகள், வேளாண்மை முறைகள், மாடுகள் நோய் எதிர்ப்பு தன்மை அல்லது விரைவான வளர்ச்சி உள்ள பகுதிகள் ஆகியவற்றால் பால் சுரப்பி உறுப்பில் ஏற்படும் அழுத்தங்கள் ஆண்டுக்கு ஆண்டு மாறி வருகிறது.

தகவல் : *முனைவர் மா.வெங்கடேசன் மற்றும் முனைவர் சு.சிவராமன், கால்நடை சிகிச்சை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைவாசல், கூட்டு ரோடு, சேலம் – 636 112.*

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# திருச்செங்கோட்டில் ரூ.33 லட்சத்திற்கு எள் விற்பனை

ஈரோடு, ஏப்.10

ஈரோடு மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், 321 மூட்டை எள் ரூ.33.02 லட்சத்திற்கு விற்பனையானது. கருப்பு எள் கிலோ ரூ.85 முதல் 161 வரையும், சிவப்பு எள் ரூ.110 முதல் 142 வரையும், வெள்ளை எள் ரூ.111 முதல் 139 வரை விற்பனையானது. தலைவாசல், ஆத்தூர், குமாரபாளையம் பகுதியிலிருந்து எள் அதிக வரத்து இருந்தது.





# ரூ.91 லட்சத்திற்கு தேங்காய் பருப்பு விற்பனை

ஈரோடு, ஏப்.10

ஈரோடு மாவட்டம், வெள்ளகோவில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நடந்த ஏலத்தில் ரூ.91 லட்சத்துக்கு தேங்காய் பருப்பு விற்பனை நடைபெற்றது.

வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடைபெற்ற ஏலத்திற்கு வெள்ளகோவில், விளாத்திகுளம். வாணியம்பாடி, மங்கலபட்டி, மணப்பாறை, முத்தூர் பகுதி விவசாயிகள் 62,000 கிலோ எடை கொண்ட தேங்காய் பருப்பை ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் முன்னிலையில் நடைபெற்ற ஏலத்தில் முதல் தர பருப்பு அதிகபட்சமாக ஒரு கிலோ ரூ.168.99க்கும், இரண்டாம் தரம் ஒரு கிலோ ரூ.114.99க்கும் ஏலம் நடைபெற்றது. மொத்தம் 91 லட்சத்து 51 ஆயிரத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333